**செ. கு. எண்**: 216 **நாள்**: 12-06-2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 12.6.2012

திருப்பூர் மாவட்டம், தெற்கு உட்கோட்டம், மத்திய காவல் நிலையத்தில் சிறப்பு உதவியாளராகப் பணி புரிந்து வந்த திரு. C.அருள் சாமுவேல் அவர்கள் 5.6.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை, G-3 கீழ்ப்பாக்கம் போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.நாகராஜ் அவர்கள் 6.6.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் அருள் சாமுவேல் மற்றும் நாகராஜ் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாரடைப்பினால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. C.அருள் சாமுவேல் மற்றும் திரு. P.நாகராஜ் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**